என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்னம்பலம்.

திரு. ப. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சரம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையம் அமைந்திருப்பது மதுரை மேற்கு ஒன்றியத்தின் மையப் பகுதியாகும். இப்பகுதியில் ஆதிதிராவிடர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பொன்னம்பலம், கட்டடம் கட்டப்படும் என்கிறார், மந்திரி.

திரு. ப. பொன்னம்பலம்: அதற்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 236, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

236—

பரிசோதனைக் கூடம்

***3938—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் மற்றும் குளிர்சாதன வசதியுடன் பிணவறை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): அவினாசி அரசு மருத்துவமனையில் குளிர்சாதன வசதியுடன் பிணவறை அமைத்துத் தருவதற்கான திட்டம் அரசிடம் தற்போது இல்லை. இருந்தாலும், இது தாலுக்கா மருத்துவமனையாக

2002 ஏப்ரல் 26]

இருப்பதால், பிரேத பரிசோதனைக் கூடம் அமைக்க அரசுக்கு முன் மொழிவு அனுப்பப்பட்டு அது தற்போது நடவடிக்கையில் இருந்து வருகிறது.

முற்பகல் 10-40

திரு. எஸ். மகாலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் குடும்பத்தின் குலதெய்வமாகவும், தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாகவும், இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராகவும் விளங்கிக் கொண்டிருக்கும் எங்கள் இதயதெய்வம், ஜனநாயகத்தில் எல்லோருக்கும் எல்லா உரிமைகளும் உண்டு என்பதை வித்திட்டுக் காட்டிய எங்கள் இதயதெய்வம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை நோக்கி எனது பணிவான வணக்கத்தைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன். நான் மத்திய ரிசர்வ் காவல் படையில் 1993 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை பணியாற்றிய காரணத்தினால், நேற்றையதினம் காவல்துறை மானியக் கோரிக்கையின்போது நல்ல பல திட்டங்களை அறிவித்து, இந்தியாவிலேயே சிறந்த காவல் துறையாக உருவாக்கிட வழிவகை செய்த எங்கள் காவல் தெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதிக்குட்பட்ட அவினாசி அரசு மருத்துவமனையில் இதுநாள்வரை பிரேத பரிசோதனைக் கூடம் மற்றும் பிணவறை வசதி இல்லாத காரணத்தினால் சாலை விபத்து மற்றும் பிற காரணங்களினால் மரணமடைந்தவர்களின் சடலங்களை அதிகத் தொலைவில் உள்ள திருப்பூர் அல்லது கோவை அரசு மருத்துவமனைகளுக்கு எடுத்துச் சென்று, அங்கே பிரேத பரிசோதனை செய்து முடித்து, பின்னர் எடுத்து வந்து அடக்கம் செய்ய வேண்டியுள்ளது. இதனால் ஏழை எளிய மக்களாக இருப்பவர்கள் படுகின்ற துன்பங்கள் வார்த்தைகளால் சொல்ல இயலாது. எங்கள் தாய் கேட்காமலேயே அள்ளிக்கொடுக்கும் உயர்ந்த உள்ளம் படைத்தவர். ஆகவே, எனது தொகுதி மக்களின் நலன் கருதி நடப்பு நிதியாண்டில் அவினாசி அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் மற்றும் குளிர்சாதன வசதியுடன் பிணவறை அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2002 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி மருத்துவமனை என்பது ஒரு வட்டார மருத்துவமனை. தற்போது பிரேத பரிசோதனை செய்யப்படவேண்டும் என்று சொன்னால், அங்கிருந்து உடல்கள் திருப்பூர் மாவட்ட அரசு மருத்துவமனைக்குத்தான் எடுத்துச்செல்லப்படுகின்றன. எனவே, இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என்பதற்காகத்தான் நிலம் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, வருவாய்த் துறையின்மூலம் இப்போது 5 சென்ட் நிலம் மருத்துவத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 4.5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பிரேத பரிசோதனைக் கூடம் அமைப்பதற்கான முன்மொழிவு அரசுக்கு அனுப்பப்பட்டு, தற்போது பரிசீலனையில் இருந்து வருகிறது. எனவே, அவினாசி மருத்துவமனை வளாகத்திலே உடனடியாகப் பிரேத பரிசோதனைக் கூடம் கட்டுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 237; திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

237—

குடிநீர் வழங்கல்

***1042—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் வளாகப் பகுதியிலுள்ள அடுக்குமாடிக் கட்டடத்தின்மீதுள்ள குடிநீர்த் தொட்டிக்கு கோயம்புத்தூர் மாநகராட்சி முறையாகக் குடிதண்ணீர் வழங்குவதில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயம்புத்தூர் ரேஸ்கோர்ஸ் வளாகத்திலுள்ள அடுக்குமாடிக் கட்டடத்தின்மீதுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு கோயம்புத்தூர் மாநகராட்சியால் நேரடியாகக் குடிநீர் வழங்கப் படுவதில்லை. இந்த வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கீழ்நிலை நீர்த்